1973 மார்ச் 1]

லாபம் தனியாரிடம் மட்டும் குவிகிற நிலைமையைத் தடுக்கும் வாய்ப்பிருக்கிறது. உரம் விவசாயிகளுக்கு மிகமிகத் தேவை என்பதால் பூரணமாக விநியோகிக்கும் முறையில் கொள்கையை வகுத்து, அதை விநியோகிக்கச் சொல்லக்கூடிய முறையில் அதிகாரம் நமக்கு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நிர்வாகத்தில் தனியார் நான்குபேரும், அரசாங்கப் பிரதிநிதிகள் நான்குபேரும் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நிர்வாக கண்ட்ரோல் அரசாங்கத்திற்கு இருக்கிறதா அல்லது தனியாரிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கம்பெனி நிர்வாகம் என்றால் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ், போர்ட் ஆஃப் டைரக்டர்களில் நமக்கு நான்கு பேர்கள், அவர்களுக்கு நான்கு பேர்கள். கம்பெனியை நடத்தும் அதிகாரம் கம்பெனி வேலையாட்கள். நமக்கும் அவர்கள் வேலையாட்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இதற்கு வேண்டிய நிரந்தரமான மூலப்பொருட்கள், நாப்தா போன்றவைகள் ஒழுங்காகக் கிடைக்கும் என்று கருதுகிறதா? அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாப்தா கிடைப்பதிலே காலதாமதம் அதிகமானது. 1971 போதுந்நேரத்தில் வந்தது, நமக்கு நாப்தா கிடைத்தது. தொடர்ந்து அது கிடைக்கும் என்று நம்புகிறோம்.

Pension for widows

* 200 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any scheme with the Government to create employment opportunities or give pension to widows in the State; and

(*b*) if not the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) முதுவயதினருக்கு உதவிப்பணம் அளிக்கும் திட்டத்தின்கீழ் உதவிப்பணம் பெறத் தகுதியுள்ள விதவைகளுக்கு உதவிப் பணம் கிடைக்கும். விதவைகளுக்கென தனி உதவிப் பணத் திட்டம் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப்பட்ட முதியோர் பென்ஷனிலே 1965-ஆம் வருஷம் ஒரு சீலிங் வைத்திருக்கிறார்கள். அதற்குள்ளே ஏற்படும் வேகன்சிஸ்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். முதியோர் செத்தால் தான் புதிய முதியோருக்குக் கிடைக்கிறது. அப்படியில்லாமல் ஆண்டுக்காண்டு எவ்வளவு விண்ணப்பங்கள் வருகின்றனவோ அத்தனையும் நியாயமாகக் கவனித்து பென்ஷன் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாநில அரசு இதற்காக ஒதுக்கிய பணத்தைப்பொறுத்து எவ்வளவு பேர் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, குறைந்த வயதுடைய விதவைகள் மறுமணம் செய்வதுதான் முறையாக இருக்கும். குறைந்த வயதுள்ள விதவைகள் மறுமணம் செய்து கொள்ள அரசு உதவியளிக்க முன்வருமா?

(பதில் இல்லை)

திரு. சோ. அழகர்சாமி: இந்த உதவிப் பணம் காங்கிரஸ்காரர்கள் காலத்திலே வருஷத்திற்கு இவ்வளவு என்று ஒதுக்கப்பட்டு அதே அளவுதான் இப்பொழுதும் இருக்கிறது, மொத்தத் தொகையைச் சொல்கிறேன். அப்பொழுது எத்தனை அப்ளிகேஷன்களுக்குக் கொடுத்தார்களோ அதுவேதான் இப்பொழுதும் கொடுக்கப்படுகிறது. புதிதாக வருபவர்களுக்கு, அம்மையார் அவர்கள் சொல்லியதுமாதிரி, உதவிப் பணம் பெறுபவர்களில், கிராமத்திலுள்ள விவசாயக் கூலிகள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதியோர் பென்ஷனுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது சொன்னார்கள், அதனால்தான் கேட்கிறேன். ஆகவே, இந்தமாதிரி அந்தத் தகுதி உள்ளவர்களுக்கு, எந்த நாதியுமற்ற நிலையில் 60 வயதிற்கு மேல் உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் உதவித்தொகை கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும்போது எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய அளவுக்கு நமக்குப் பண வசதி கிடைத்தால் நிச்சயம் அந்த அளவுக்கு கொடுக்க முடியும். மூலக் கேள்விகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. விதவைகள் முதியோராக இருந்தால் அவர்களுக்கும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னேன். முதியோர் பென்ஷனை பற்றி நான் சொல்லவில்லை.

[1973 மார்ச் 1]

திரு. அ. ஆறுமுகம் : விதவைகள் 70 வயதாக இருந்தால் உதவிப் பணம் கொடுக்கலாம் என்றார்கள். இந்த வயதைக் குறைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

(பதில் இல்லை.)

திரு. சு. துரைசாமி : விதவைகளுக்கு உதவிப் பணம் கொடுக்காவிட்டாலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விதவைகள் மட்டுந்தான் அதைச் செய்ய வேண்டுமென்றில்லை. எல்லோருமே அந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : விதவைகளுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். அரசாங்க வேலையில் இருந்து திடீரென்று இறந்து விடுகின்றவர்களின் மனைவிகளுக்கு, விதவைகளுக்கு பென்ஷன் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தில் பணியாற்றும் போது இறந்து விட்டால் குடும்பத்திற்கு என்னென்ன சலுகைகள் கொடுக்க வேண்டுமென்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி சலுகைகள் கொடுக்கப்படுகின்றன.

Ponds scheme in Erode Taluk

*201 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether estimates have been received from the Public Works Department for the formation of ponds in Muthugoundanpalayam, Uthukuli and Veerachipalayam Thudupatti village, Perundurai of Erode taluk during 1971; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி முத்துகவுண்டன்பாளையம், ஊத்துக்குளி, வீராச்சிபாளையம் குட்டைகள் அமைப்பதற்கான திட்டங்கள் பற்றியதாகும். இந்தத் திட்டங்கள் அந்தக் கிராமங்களின் பக்கத்தில் இருக்கின்றன. முத்து கவுண்டன்பாளையம் கிராமத்தினருகில் குட்டை அமைப்பதற்காக சுமார் 75,000